**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : DW-2
Date : 03.10.2024
Case No. : **O.S.497/2019**
Nationality : Indian
Name : முருகன்
Religion :
Father's/Husband's Name : கிருஷ்ணமூர்த்தி
Age : 46
Village :
Taluk :

<u>பி.வா.சா.2</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் கோட்டூர் எடத்தெருவில் வசித்து வருகிறேன். வழக்கின் வாதி பிரதிவாதிகளை எனக்கு தெரியும். 1ம் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் எனது சகோதரர்கள் ஆவார்கள். இவ்வழக்கினை துரை, கிட்டு என்பவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். நான் எடத்தெருவில் ஓட்டு வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனது ஓட்டு வீட்டிற்கு அருகில் மாட்டுக் கொட்டகை உள்ளது. மேற்படி மாட்டுக் கொட்டகையில் மாடுகள் உள்ளது. அவற்றை கிட்டு பார்த்துக் கொள்கிறார். நான் குடியிருக்கும் வீட்டிற்கு ரமேஷ் வீட்டிலிருந்து மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நான் மேற்படி ஓட்டு வீட்டில் சுமார் 7 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பாக எனது அண்ணன் கிட்டு குடியிருந்து வந்தார். என்னை மேற்படி வீட்டில் கிட்டு அண்ணன் குடி வைத்தார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பிசாஆ 6 புகைப்படங்களில் 1வது புகைப்படத்தில் உள்ள வீட்டில்தான் நான் குடியிருந்து வருகிறேன். 2வது புகைப்படத்தில் உள்ள மாட்டுக் கொட்டகைதான் எனது வீட்டிற்கு அருகில் உள்ள மாட்டுக் கொட்டகை ஆகும். தாவா

சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 121, 124 ஆகும்.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2024.10.04 10:48:55 +0800

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.